வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: வான்மதி

நாள்: 20.11.2023 நேரம்: மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

- ஏழை-எளிய மக்கள் உட்பட நலிவடைந்த அனைத்துப் பிரிவினருக்கும், அனைத்து அடிப்படை வசதிகளையும் வழங்குவதில் தாம் உறுதியுடன் இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- பிரதமர் இன்று, உத்தராகண்ட் முதலமைச்சரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, சில்க்யாரா சுரங்கத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்பதற்கான முயற்சிகள் குறித்து கேட்டறிந்தார்.
- 54ஆவது சர்வதேச திரைப்பட விழாவை, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் கோவாவில் இன்று மாலை தொடக்கி வைத்தார்.
- மத்திய-மாநில அரசுகள், இரட்டை எஞ்சினாக இணைந்து செயல்பட்டால்தான், சிறப்பான வளர்ச்சி சாத்தியம் என்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் கூறியுள்ளார்.

----------------------

ராஜஸ்தான்-மோடி (19)

ஏழை-எளிய மக்கள் உட்பட நலிவடைந்த அனைத்துப் பிரிவினருக்கும், அனைத்து அடிப்படை வசதிகளையும் வழங்குவதில் தாம் உறுதியுடன் இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று ராஜஸ்தான்

மாநிலம் பாலி பகுதியில், தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், இந்தியாவை முன்னேறிய நாடாக மேம்படுத்த தமது அரசு கடினமாக உழைத்து வருவதாக தெரிவித்தார். ராஜஸ்தானில் தற்போதுள்ள காங்கிரஸ் அரசில், ஊழலும், வேண்டியவர்களுக்கு சலுகை காட்டும் போக்கும் மலிந்து இருப்பதாக அவர் தெரிவித்தார். மக்களுக்கு உயர் முன்னுரிமை அளிக்கக் கூடிய ஒரு அரசு, ராஜஸ்தானுக்கு தேவைப் படுவதாக கூறினார். காங்கிரஸ் ஆட்சியில், பெண்கள் மற்றும் அட்டவணைப் பிரிவினர் தாக்குதலுக்கு ஆளாவதாகவும், மாநில மக்கள், பாரதீய ஜனதாவிற்கு வாக்களித்து இந்நிலையை மாற்ற வேண்டும் என்றும், அவர் கேட்டுக் கொண்டார். பிரதமர் இன்று ராஜஸ்தானில், ஹனுமான்கார், பிக்கானேர் ஆகிய இடங்களிலும் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார். இதற்கிடையே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, ஸ்ரீகங்காநகர் உள்ளிட்ட இடங்களிலும், மூத்த காங்கிரஸ் தலைவர் திருமதி பிரியங்கா காந்தி, ஜஹாஸ்பூர் உள்ளிட்ட இடங்களிலும், தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். ராஜஸ்தானில், அனைத்து 20 தொகுதிகளுக்கான சட்டமன்றத் தேர்தல், நவம்பர் 25ஆம் தேதி நடைபெறும்.

-----------------------

தெலங்கானா (11)

தெலங்கானாவில், அனைத்து 119 தொகுதிகளுக்கும் நவம்பர் 30ஆம் தேதி நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது. மாநில பிஜேபி தலைவர் திரு. கிஷண் ரெட்டி, இன்று ஹைதராபாத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில், தெலங்கானாவில்,

ஆளும் பிஆர்எஸ் கட்சிக்கு எதிராக, அமைதிப் புரட்சி நிகழ்ந்து வருவதாக கூறினார். காங்கிரஸ், நடைமுறைக்கு சாத்தியமில்லாத வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்குவதாகவும், ஹிமாச்சல பிரதேசம் மற்றும் கர்நாடகத்தில், தேர்தலின் போது வழங்கிய வாக்குறுதிகளை காங்கிரஸ் நிறைவேற்றவில்லை என்றும் அவர் தெரிவித்தார். திரு. அமித் ஷா, திரு. நிதின் கட்கரி உள்ளிட்ட மூத்த பிஜேபி தலைவர்களும், தெலங்கானாவில், தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளனர்.

-----------------------

உத்ராகண்ட் (14)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, உத்தராகண்ட் முதலமைச்சர் திரு. புஷ்கர்சிங் தாமியை, தொலைபேசியில் தொடர்பு கொண்டு, உத்ரகாசி மாவட்டம் சில்க்யாரா சுரங்கத்தில், இடிபாடுகளில் சிக்கி உள்ள 41 தொழிலாளர்களை பத்திரமாக மீட்பதற்கான முயற்சிகளின் நடப்பு நிலை குறித்து கேட்டறிந்தார். மீட்புப் பணிக்கு தேவையான இயந்திரங்கள் மற்றும் இதர வசதிகளை மத்திய அரசு வழங்கி இருப்பதாகவும், மத்திய- மாநில அரசு ஏஜென்சிகளுக்கு இடையிலான பரஸ்பர ஒருங்கிணைப்பு மூலம், தொழிலாளர்கள் பத்திரமாக மீட்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார். இதற்கிடையே, சர்வதேச சுரங்கப் பணிகள் மற்றும் நிலத்தடி பணிகள் சங்கத்தின் தலைவர் திரு. அர்னால்ட் டிக்ஸ், மீட்புப் பணிகளுக்கு உதவும் வகையில் இன்று, சம்பவ இடத்திற்கு வந்து சேர்ந்துள்ளார். தேசிய நெடுஞ்சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம், தேரி நீர் மின்சாரக்

கழகம், ரயில் விகாஸ் நிகம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் மீட்புப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன.

-----------------------

*திரைப்பட விழா* (14)

54ஆவது சர்வதேச திரைப்பட விழாவை, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் கோவாவில் இன்று மாலை தொடக்கி வைத்தார். Film bazzar என்னும் திரைப்பட சந்தை நிகழ்வையும் அவர் தொடக்கி வைத்தார். தொடக்க விழாவில், மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். Catching Dust என்ற பிரிட்டீஷ் திரைப்படத்துடன் தொடங்கும் இந்த 9 நாள் திரைப்பட விழா, The Feather weight என்ற அமெரிக்க திரைப்படத்துடன் நிறைவடைய உள்ளது. திரைப்பட விழாவில், மொத்தம் 270க்கும் மேற்பட்ட பல்வேறு மொழித் திரைப்படங்கள் திரையிடப் படுகின்றன. திரைப்பட விழாவின் ஒருபகுதியாக, சத்யஜித் ரே வாழ்நாள் சாதனையாளர் விருது, ஹாலிவுட் திரைப்பட நடிகரும், தயாரிப்பாளருமான மைக்கேல் டக்ளஸ்-க்கு வழங்கப்பட உள்ளது. ஓடிடி இணைய தள திரைப்படங்களை அங்கீகரிக்கும் வகையில், ஓடிடி விருதுகளும் இவ்வாண்டு வழங்கப் படுகின்றன.

-----------------------

*மாண்டவியா* (8)

புதுடெல்லி பிரகதி மைதானத்தில் நடைபெறும், இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியில் அமைக்கப் பட்டுள்ள சுகாதார அரங்கை, மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா இன்று திறந்து வைத்தார்.

ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கம், பிரதமரின் ஜன் ஆரோக்கியா திட்டம் உட்பட பல்வேறு அரசுத் திட்டங்கள் பற்றிய விளக்கக் காட்சிகளை அவர் பார்வையிட்டு, திட்டப் பயனாளிகளுடன் கலந்துரையாடினார். பயனாளிகளுக்கு ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கு மற்றும் ஆயுஷ்மான் பாரத் அட்டை வழங்கும் பணிகளும், இந்த அரங்கில் இடம்பெற்றுள்ளன.

-----------------------

*அரசியல் சாசனம்* (9)

நவம்பர் 26ஆம் தேதி, அரசியல் சாசன தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, அரசியல் சாசன வினாடி-வினாப் போட்டியிலும், அரசியல் சாசன முன்னுரையை ஆன்-லைனில் படிக்கும் இயக்கத்திலும், நாட்டு மக்கள் பெருமளவில் பங்கேற்க வேண்டும் என, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது. இதற்கென, constitution quiz.nic.in, read preamble.nic.in ஆகிய 2 இணைய தளங்களை, அமைச்சகம் செயல்படுத்தி உள்ளது. அரசியல் சாசனத்தின் முன்னுரையை 22 இந்திய மொழிகளில் வாசிக்கும் வசதிகளும், பங்கேற்பாளர்கள், சான்றிதழ் பதிவிறக்கம் செய்து கொள்வதற்கான வசதிகளும் இணைய தளத்தில் இடம்பெற்றுள்ளன.

-----------------------

*யாத்திரை 1* (8)

மத்திய- மாநில அரசுகள் இணைந்து செயல்பட்டால்தான் சிறப்பான வளர்ச்சி சாத்தியம் என்றும், இரட்டை எஞ்சின் ஆட்சி என்பது, இதுதான் என்றும், புதுச்சேரி துணை நிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன்

கூறியுள்ளார். இன்று டி.என் பாளையத்தில், நமது லட்சியம்-வளர்ச்சி அடைந்த பாரதம் என்னும் வாகன யாத்திரையின் தொடக்க விழாவில் அவர் பேசுகையில், அட்டவணை இனத்தவர் மீது, பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு தனி அக்கறை இருப்பதாகவும், இவர்களின் வாழ்க்கையை முன்னேற்ற, பிரதமர் பல திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் கூறினார்.

(வாய்ஸ்)

*யாத்திரை* 2 (5)

நம்நாடு எல்லாத் துறைகளிலும், எல்லா நிலைகளிலும், சீரிய வளர்ச்சியை அடைய வேண்டும் என்பதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி மேற்கொள்ளும் முயற்சிகள், பாராட்டத் தக்கவை என்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, தமது தலைமை உரையில் கூறினார். அரசால் அறிவிக்கப்படும் திட்டங்கள் அனைவருக்கும் சென்று சேர்ந்தால்தான், வளர்ச்சி சாத்தியமாகும் என்று அவர் தெரிவித்தார்.

(வாய்ஸ்)

*யாத்திரை 3* (10)

இந்நிகழ்ச்சியில், துணை நிலை ஆளுநர் தலைமையில், வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான உறுதி மொழியை அனைவரும் எடுத்துக் கொண்டனர். பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. அரசுத் திட்ட பயனாளிகள் தங்களின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். சாதனை புரிந்த உள்ளூர் விளையாட்டு வீரர்கள், மற்றும், சமூக சேவகர்கள் கவுரவிக்கப் பட்டனர்.

தொடர்ந்து பயண வாகனத்தில் ஒளிபரப்பு செய்யப்படும் குறும்படத்தை, துணை நிலை ஆளுநரும், முதலமைச்சரும் பார்வையிட்டனர்.

சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ்.பி ரமேஷ், தலைமைச் செயலர் உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

------------------------

*தமிழிசை சுற்றுலா* (11)

புதுச்சேரியை அடுத்த மணப்பட்டில், பல்பொருள் சுற்றுலா மண்டலம் அமைப்பது குறித்து, துணை நிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் இன்று, ராஜ்நிவாசில் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். புதுச்சேரியில்உள்ள பொழுதுபோக்கு மற்றும் சுற்றுலா வசதிகள் குறித்தும், புதுச்சேரிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் சராசரியான செலவுத் திறன் குறித்தும், இக்கூட்டத்தில் மதிப்பாய்வு செய்யப் பட்டது. சிங்கப்பூர் மாடல் மற்றும் கேரளா மாடல் சுற்றுலா வளர்ச்சி குறித்தும் விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலர் திரு. ராஜீவ் வர்மா, திட்டத் துறைச் செயலர் திருமதி முத்தம்மா, பொதுப் பணித் துறைச் செயலர் திரு. மணிகண்டன் மற்றும் சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

------------------------

*ஏனாம்* (6)

ஏனாமில் உள்ள டாக்டர் எஸ்.ஆர்.கே அரசு கலைக் கல்லூரியில், தகவல் தொடர்பு திறன்களில், மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான 3

நாள் தேசிய பயிலரங்கை, மண்டல நிர்வாக அதிகாரி திரு. ஆர். முனுசாமி இன்று தொடக்கி வைத்தார். காக்கிநாடா சத்யவதி மகளிர் கல்லூரி முதல்வர் டாக்டர் அனந்த லட்சுமி, தகவல் தொடர்பு திறன்களின் முக்கியத்துவம் குறித்து இந்நிகழ்ச்சியில் உரையாற்றினார்.

-----------------------

*விசாகப்பட்டினம் (10)*

விசாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில், நேற்றிரவு தீவிபத்தில் பல படகுகள் எரிந்து போன இடத்தை, மாவட்ட இணை ஆட்சியர் திரு விஸ்வநாத் நேரில் சென்று பார்வையிட்டார். சேதமடைந்த படகுகள் பற்றிய விவரங்கள் மீன்வளத் துறையிடம் இருந்து சேகரிக்கப் படுவதாகவும், பாதிக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் படகு உரிமையாளர்களுக்கு தேவையான உதவிகளை அரசு வழங்கும் என்றும் அவர் கூறினார். தீவிபத்திற்கான காரணங்களை ஆராய்ந்து, மீன்பிடித் துறைமுகத்தில் குறைபாடுகள் சரி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். பெரிய அளவிலான இந்த தீவிபத்தில், 25க்கும் மேற்பட்ட இயந்திரப் படகுகள் எரிந்து போயின. 5 தீயணைப்பு வண்டிகள் வரவழைக்கப்பட்டு, தீயை அணைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

-----------------------

*உலக மரபு* (6)

உலக மரபு வார விழாவின் ஒருபகுதியாக, மதுரையில் நடைபெறும் புகைப்பட கண்காட்சியை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் இன்று தொடக்கி வைத்தார். தென்தமிழக கோவில்கள் பற்றிய

கவியரங்கமும், இந்நிகழ்ச்சியில் இடம்பெற்றது. தஞ்சை பெரிய கோவில் வளாகத்தில், உலகப் பாரம்பரிய விழிப்புணர்வு பேரணியை, மாவட்ட ஆட்சியர் திரு. தீபக் ஜேக்கப், இன்று கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

-----------------------

*வானிலை (11)*

குமரிக் கடல் மற்றும் அதை ஒட்டிய பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சியும், தமிழக கடலோர பகுதிகள் மற்றும் அதை ஒட்டிய தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில், ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சியும் நிலவுவதால், கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும், உள்தமிழகத்தின் ஒருசில இடங்கள் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 26ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

-----------------------

*கால்பந்து* (4)

2026ஆம் ஆண்டு நடைபெற உள்ள, FIFA உலகக் கோப்பை கால்பந்து போட்டிகளுக்கான தகுதிச் சுற்று போட்டிகளின் ஏ - பிரிவில், புவனேஸ்வரில் நாளை இந்தியா,கத்தார் அணியை எதிர்கொள்கிறது. ஏ-பிரிவில் முதல் 2

இடங்களை கைப்பற்றும் அணிகள், ஆசியக் கால்பந்து போட்டிகளின் தகுதிச் சுற்றுக்கு தகுதி பெறும்.

-----------------------

*ஸ்டாலின் (12)*

தமிழகத்தில், கூட்டுறவுத் துறை சார்பில், 23 கோடி ரூபாய் செலவில் கட்டப் பட்டுள்ள கிடங்குகள், ஏலக் களங்கள், மற்றும், ஆய்வுக் கூடம் உள்ளிட்ட வசதிகளை, முதலமைச்சர் திரு. மு.க ஸ்டாலின் இன்று, சென்னை தலைமை செயலகத்தில் இருந்து காணொலிக் காட்சி மூலம் தொடக்கி வைத்தார். தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில், புதிதாக கட்டப் பட்டுள்ள சுமார் 4 ஆயிரத்து 272 புதிய குடியிருப்புகளையும் அவர் திறந்து வைத்தார். பயனாளிகள் தாங்களாகவே வீடு கட்டிக் கொள்ளும் திட்டத்தின் கீழ், 4 ஆயிரதது 680 பயனாளிகளுக்கு மொத்த 98 கோடி ரூபாய் மதிப்பிலான பணி ஆணைகளையும் தமிழக முதலமைச்சர் வழங்கினார். தொடர்ந்து நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகத்திற்கான நில ஆர்ஜிதப் பணிகளால் பாதிக்கப்பட்ட, 3 ஆயிரத்து 543 பேருக்கு, மாற்று இடங்களுக்கான பட்டாக்களையும் அவர் வழங்கினார்.

-----------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

ஏழை-எளிய மக்கள் உட்பட நலிவடைந்த அனைத்துப் பிரிவினருக்கும், அனைத்து அடிப்படை வசதிகளையும் வழங்குவதில் தாம் உறுதியுடன் இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் இன்று, உத்தராகண்ட் முதலமைச்சரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, சில்க்யாரா சுரங்கத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்பதற்கான முயற்சிகள் குறித்து கேட்டறிந்தார்.

54ஆவது சர்வதேச திரைப்பட விழாவை, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் கோவாவில் இன்று மாலை தொடக்கி வைத்தார்.

மத்திய-மாநில அரசுகள், இரட்டை எஞ்சினாக இணைந்து செயல்பட்டால்தான், சிறப்பான வளர்ச்சி சாத்தியம் என்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் கூறியுள்ளார்.

-----------------